DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.No.75/2025**
Prosecution Witness P.W.18

Name : **திரு.கருப்பசாமி** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 07.04.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

நான் கண்டமனூர் கிழக்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இறந்து போன சஞ்சீவி எனது நண்பர். எனக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகள் யாரையும் தெரியாது. எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் தான் எப்போதாவது அவர்களை எங்கள் ஊரில் பார்த்திருக்கிறேன். போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது. நான் எதுவும் பார்க்கவில்லை. ஏற்கனவே என்னை நீதித்துறை நடுவர் ஆண்டிப்பட்டி அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள். அப்போது எந்த விபரம் தெரியாதென்று தான் நான் சொன்னேன். நீதித்துறை நடுவர் முன்பு கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது அ.த.சா.ஆ.22.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நீதித்துறை நடுவர் முன்பு நான் சொல்ல, சொல்ல தான் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் ஒரு நாள் 20ம் தேதியன்று கண்டமனூர் ஹாஸ்டல் பக்கத்தில் நானும், சஞ்சீவ் குமாரும் இரவு

07.00 மணிக்கு இருந்தபோது அஜித்குமார் என்பவர் சஞ்சீவ் குமாருக்கு போன் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன்பிறகு சஞ்சீவ் குமார் அஜித்குமாரை பார்க்க சென்றார் என்றும், அதற்கு பின்பு மறுநாள் சஞ்சீவ் குமார் இறந்துவிட்டதாகவும் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்பு சஞ்சீவ் குமாருக்கு வழக்கு ஏதும் உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. சீமான் கொலை வழக்கு தொடர்பாக சஞ்சீவ் குமார் மீது வழக்கு இருந்தது என்றும், அதனால் அவர்கள் இடையே முன்விரோதங்கள் இருந்தது என்றும், இந்த விவரங்களை நான் போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. இந்த முன்விரோதம் தொடர்பான விபரங்களை போலீஸ் விசாரணை நான் சொல்லி உள்ளேன் என்றும், நீதித்துறை நடுவர் முன்னிலையிலும் அவர்களை பார்த்ததாக நான் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றும் எண்ணத்தில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சஞ்சீவ் குமார் இறந்ததாக சொல்லும் நாளில் நான் மத்திய சிறையில் சிறைவாசியாக இருந்தேன் என்றால் சரிதான் அன்றைய தினம் நான் ஜெயிலில் தான் இருந்தேன் ஜெயிலுக்கு போன தினத்தன்று நான் சஞ்சீவ் குமாரை பார்க்கவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.07 18:04:40 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.